IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 46/2021

| | |
|---|---|
| Deposition of Witness | : PW 1 |
| Name | : ஜெயவேலு (வயது – 69) |
| Father's Name /W/o | : த/பெ அண்ணாமலை |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : தக்கோலம் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.10.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சினையான சொத்து தாவா சொத்தின் 2 ஆம் ஐட்டம் என்றால் சரிதான். 1 ஆம் ஐட்டத்தில் எந்த பிரச்சினை இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்தின் 1 ஆம் ஐட்டம் சொத்துக்கள் குறித்து தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 2 பட்டா 1 ஆம் ஐட்டம் சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். என் தந்தை பெயர் என்னவென்றால் அண்ணாமலை. என் தந்தை ராஜமாணிக்கத்திற்கு 2 ஆம் ஐட்டம் சொத்துகளை விற்றாரா என்றால் இல்லை. சர்வே எண்.431/1சி எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 13.5 செண்ட். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்து பதிலுரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பதிலுரையில் என்ன தெரிவித்துள்ளார்கள் என்றால் என் தந்தையிடம் இருந்து 2 1/2 செண்ட் வாங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

2. மேற்படி 2 1/2 செண்ட் குறித்துதான் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சினை என்றால் சரிதான். மேற்படி 2 1/2 செண்ட் சேர்த்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை விற்றதாக பிரதிவாதிகள் சொன்ன பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள 2 ஆம் ஐட்டம் தெற்கில் ராஜமாணிக்கம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். ராஜமாணிக்கத்தின் பிள்ளைகள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

3. 13 .5 செண்டில் எனக்கு 11 செண்ட் உரிமையுள்ளதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள 2.5 செண்ட் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ராஜமாணிக்க முதலியாருக்கு சொந்தமானது. ராஜமாணிக்க முதலியாருக்கு எப்படி 2.5 வந்தது என்றால் எனக்கு தெரியாது ஆனால் என் பெரியம்மா சொக்குபாய் அம்மாள் விற்றதாக சொன்னார்கள்.

4. மேற்படி பெரியம்மா என் தந்தையாரின் அண்ணன் லோகநாதன் செட்டியாரின் மனைவி என்றால் சரிதான். சர்வே எண்.431/1சி என் பெரியம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் பூர்வீக சொத்து ஆகும். மேற்படி சர்வே எண்.431/1சி இல் என் தந்தையாருக்கும் என் பெரியப்பாவிற்கும் உரிமையானதா என்றால் தெரியாது. ராஜமாணிக்கம் சொக்குபாய் அம்மாள் என்பவரிடமிருந்து 19.09.1982 தேதியில் கிரையம் வாங்கினார் என்றால் அதைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை.

5. தாவா சொத்து அருகில் சர்வே எண்.434/1 இல் என் தந்தையாருக்கும் என் பெரியப்பாவிற்கும் வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் தெரியாது. பிரதிவாதி தாக்ல் செய்த பதிலுரையை படித்து பார்த்து சர்வே எண்.434/1 இல் என் தந்தைக்கு சொத்து உள்ளதா என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என் தந்தையிடம் இருந்து ராஜமாணிக்கம் 07.01.1984 தேதியில் 2 செண்ட் நிலம் கிரையம் வாங்கினார் என்றால் இல்லை.

6. மேற்படி சர்வே எண்.431/1சி என்பதற்கு பதிலாக சர்வே எண்.434/1 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு சர்வே எண்.434/1 இல் எந்த விதமான சொத்தும் இல்லை என்றால் தெரியாது. என் தந்தைக்கு சர்வே எண்.434/1 உரிமை இருந்திருந்தால் பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி சர்வே எண்.434/1 குறிப்பிட்டுருந்தால் என்றாலும் பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி சர்வே எண் குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. என் தந்தை எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தில் சரியான செக்பந்தியை குறிப்பிட்டு எழுதி கொடுத்தால் என்றால் தெரியாது.

7. மேற்படி என் தந்தை எழுதி கொடுத்த செக்பந்தி படி சர்வே எண்.431/1சி பிரதிவாதிகளுக்கு சொந்தம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையப் பத்திரத்தில் சர்வே எண் தவறுதலாக இருந்தாலும் செக்பந்தியின் படி சர்வே எண்.431/1சி பிரதிவாதிகளுக்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. என் தந்தை கிரையம் செய்த கிரையப் பத்திரத்தை மறைத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தது சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.